**இனிமையான குழந்தைகளே! நீங்கள் பாபாவை நினைவு செய்யுங்கள். இந்த நினைவு தான் உலகத்திற்கே யோக தானம் ஆகும். இதன்மூலம் உலகம் தூய்மையாக ஆகிவிடும், படகு கரை சேர்ந்து விடும்.**

கேள்வி: **எந்தக் குழந்தைகளை சுயம் பாப்தாதாவே இறுதியில் பாதுகாப்பார்?**

பதில்: எந்தக் குழந்தைகள் வெகு காலத்திற்கு முட்களை மலராக ஆக்கும் சேவையில் ஈடுபட்டு இருப்பார் களோ, பாபாவிற்கு முழுமையான உதவியாளர்களோ, அப்பேற்பட்ட குழந்தைகளை இறுதி சமயத்தில் சுயம் பாபா தான் காப்பாற்றுவார். பாபா கூறுகின்றார், எனக்கு உதவி செய்யும் குழந்தைகளுக்கு ஆச்சரியப்படக்கூடிய காட்சிகளைக் காண்பித்து மிகவும் மகிழ்விப்பேன். அவர்கள் இறுதியில் மிகவும் சுகத்தினை காண்பார்கள். காட்சி களைப் (சாட்சாத்காரம்) பார்த்து கொண்டே இருப்பார்கள். யார் ஒரு பாபாவை தவிர வேறு யாருமே இல்லை என்ற பாடத்தில் உறுதியாக இருக்கின்றார்களோ, அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு பாபாவின் உதவி கிடைக் கின்றது.

பாடல்: **அன்பானவரை மீண்டும் சந்திக்கின்றோம் .......**

ஓம்சாந்தி நாயகன் (பிரிய தரிசன்) மற்றும் நாயகிகள் (பிரிய தரிசினிகள்) ஒருவர் நாயகன், அநேக நாயகிகள். ஒரு பகவானை நாயகிகள் அழைக்கின்றார்கள். அநேக பக்தர்கள் அழைக் கின்றார்கள். எதற்காக? சுகத்திற்காக. நாயகனை சந்திக்க வேண்டும் கன்னிகை அழைக்கின்றார். எதற்காக? சுகத்திற்காக. சுகத்திற்காக நிச்சயதார்த்தம் செய்கின்றார்கள். தற்போது குழந்தைகள் தெரிந்து கொண்டீர்கள், எப்போது இராவண இராஜ்யம் இருக்குமோ, அப்போது நாயகனிடமிருந்து சுகம் கிடைக்க முடியாது. இராவண இராஜ்யத்தில் சுகம் இருக்க முடியாது. அனைத்து நாயகிகளும் சோகவனத்தில் உள்ளார்கள். ஆதலால் அழைக்கின்றார்கள். அசோகவனத்தில் யாருமே அழைப்பதில்லை. எந்த துக்கமும், சோகமும் அங்கே இல்லை பின் ஏன் அழைக்க வேண்டும்? நாயகிகள் துக்கத்தில் நினைவு செய்கின்றார்கள். பின்னர் நாயகன் கிடைத்தவுடன் பாதி கல்பம் நாயகிகள் நினைவு செய்வதில்லை. இப்போது நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். அனைவரையும் விட மிகவும் இனிமையானவர், அன்பான நாயகன் பரமபிதா பரமாத்மா. அனைவரையும் விட உயர்வானர், சிறந்தவர். இங்கு எந்த மனிதரும் தன்னை சிரேஷ்டத்திலும், சிரேஷ்டமானவர் என்று கூறிக்கொள்ள முடியாது. ஈஸ்வர் சர்வவியாபி, நானே சிவன் என்று கூறுகின்றார்கள். ஆனால் ஒருவர் மற்றவரை விட சிரேஷ்டமானவர்களாக இருக்கத்தான் செய்கிறார் கள். உயர்ந்த சாதுவை மற்ற சாதுக்கள் அடிபணிந்து வணங்குகின்றார்கள். ஆனால் அனைவரையும் விட உயர்ந்ததிலும், உயர்ந்தவர் ஒரே ஒரு பரமபிதா பரமாத்மா என்று மகிமை பாடியுள்ளார்கள். அனைவருமே அவரை நினைவு செய்கின்றார்கள், சுகத்திற்காக. எப்போது மிகவும் துக்கம் ஏற்படுகின்றதோ, அநேக நாயகிகள் நினைவு செய்கின்றார்கள். இப்போது குழந்தைகளுக்கு அந்தளவு துக்கத்தின் அனுபவமில்லை. இறுதியில் நிறைய துக்கம் வரப்போ கின்றது. யாரை அழைக்கின்றோமோ, அவசியம் அவர் வருவார் அல்லவா. பாபாவும் வருகின்றார். பாபாவின் குழந்தையாக ஆவதால் ஒரு வினாடியில் சுகத்தின் ஆஸ்தி கிடைக் கின்றது. நாம் பாபாவின் மடியில் வந்திருக்கின்றோம் என்று குழந்தைகளுக்கு நம்பிக்கை வர வேண்டும். ஒரு

வினாடியில் ஜீவன் முக்தி கிடைக்கின்றது. குழந்தை பிறந்தவுடன் மடியில் வந்து விடுகின்றது. இது வாரிசு என்று நிச்சயம் ஆகிவிடுகின்றது. இவர் எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தை. இப்போது நல்லவிதமாக இவரை அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொள்வதில் எந்தவித கஷ்டமும் இல்லை. குழந்தைகள் நிறைய உள்ளார்கள். குழந்தைகள் தான் தந்தையை வெளிப்படுத்த வேண்டும். யாருக்கும் கூற வேண்டிய அவசியமில்லை. அநேக பிரம்மாகுமார், குமாரிகள் இருக்கின்றார்கள். இத்தனை குழந்தைகள் ஈஸ்வரனைத் தவிர வேறு யாருக்குமே இருக்க முடியாது. கிருஷ்ணர் தெய்வீக குணம் நிறைந்த மனிதர். இத்தனை குழந்தைகள் மனிதர்களுக்கு இருக்க முடியாது. நாம் சிவபாபாவின் குழந்தை என்பதனை தெரிந்து கொண்டீர்கள். இத்தனை குழந்தைகள் எந்த மனிதர்களுக்கும் இருக்க முடியாது என்பதைக் கூறமுடியும். எத்தனை பிரம்மாகுமார், குமாரிகள்! பிரஜாபிதா பிரம்மாவிற்கு மகிமை பாடியுள்ளார்கள். பரமபிதா பரமாத்மா திரிகாலதரிசியை நினைவு செய்கின்றார்கள். இத்தனை குழந்தைகள் பகவானுக்கு இருக்க முடியும். அவர் ஜோதியாக உள்ளார், சாகாரத்தில் வந்தால் தான் தத்து எடுக்க முடியும். சரீரம் இல்லையென்றால் எப்படி மடியில் சென்றடைய முடியும்? நீங்கள் ஈஸ்வரனுடைய மடியில் வந்திருக் கின்றீர்கள். இவர்தான் நாயகன், அனைவரையும் விட இனிமையானவர் அன்பானவர். அன்பு செலுத்தக்கூடியவர் நாயகன் என்று கூறப்படு கின்றது. நீங்கள் அறிந்து கொண்டீர்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த நாயகன், நாயகிகளுக்கு சொர்க்கத்தின் அளவற்ற சுகத்தைக் கொடுக்கின்றார். அவருக்கு எதிரில் அமர்ந்திருக்கின்றோம். இராமா என்ற பெயரினைக் கூறினால் வாழ்க்கை என்ற படகு கரை சேர்ந்து விடும் என்று பக்தி மார்க்கத்தில் கூறுகின்றார்கள். ஆதலால் இராம், இராம் என்று நிறைய பேர் கூறுகின்றார்கள். எவ்வாறு கங்கை நதியை பதீதபாவனன் என்று புரிந்துள்ளார்கள். அங்கு சென்று மனிதர்கள் இலையின் மீது தீபத்தினை ஏற்றுகின்றார்கள். எவ்வாறு கிருஷ்ணர் கடலில் இலையின் மீது விரலை சூப்பிக் கொண்டு இருப்பதாக காட்டுகின்றார்கள். இவர்கள் இலை மீது தீபங்களை ஏற்றி வைக்கின்றார்கள். ஆத்மா கூட தீபம். மனிதர்களுக்கு முழுமையான ஞானமில்லை. அவர் களைப் பொருத்தவரை எல்லாம் ஒரு பழக்கமாக ஆகிவிட்டது. தீபத்தினை ஏற்றி வைத்து கூறுகின்றார்கள் ஆத்மா கரை சேர்ந்துவிட்டது. பரமபிதா பரமாத்மாவை படகோட்டி என்று கூறு கின்றார்கள். விஷக் கடலிலிருந்து அக்கரைக்கு கொண்டு செல்கின்றார். இந்த வார்த்தைகளைக் கேட்டு மனிதர்கள் ஒரு பழக்கத்தினை உண்டாக்கி விட்டார்கள். ஆத்ம தீபத்தினை பாபா ஏற்றி வைக்கின்றார். இவை யாவும் அடையாளங்கள். அக்கரை என்ற பரந்தாமத்திற்கு ஆத்மா உடலை விட்டுச் செல்கிறது. ஆத்மா அஞ்ஞானம் என்ற கடலிலிருந்து அக்கரைக்குச் செல்கிறது என்று நீங்கள் அறிந்து கொண்டீர்கள். பாபா தான் படகோட்டி. கங்கையைப் படகோட்டி என்று கூறமுடியாது. படிகோட்டி அல்லது நாயகன் ஒருவராக இருக்க வேண்டும். எத்தனை பேரை கூடவே அக்கரைக்கு அழைத்துச் செல்கின்றார். அநேக பெயர்களை வைத்துள்ளார்கள். மற்றபடி படகில், கப்பலில் அமர வைத்து யாரும் அழைத்துச் செல்வதில்லை. குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்து கொண்டீர்கள் எவ்வாறு நினைவு என்ற யாத்திரையில் இருக்கின்றோம். இதில் இராமா, இராமா என்று வாயால் சொல்ல வேண்டிய அவசியமில்லை. மனிதர்கள் கூறுகின்றார்கள் இராம் இராம் என்று சொல்லுங்கள். இந்த நாமத்தை தானம் செய்கின்றோம் என்று கருதுகின்றார்கள். பாபா அழிவற்ற ஞான இரத்தினங்களைத் தானம் செய்கின்றார். இனிமையிலும்

இனிமையான செல்லமான குழந்தைகளே! பாபாவை நினைவு செய்யுங்கள். பாபாவின் நினைவு தான் உலகத்திற்கே யோக தானம். சிவபாபாவை நினைவு செய்யுங்கள். உண்மையில் பரமபிதா பரமாத்மாவைதான் இராம் என்று கூற முடியும். ஆனால் ரகுபதி ராகவ ராஜாராம் என்று கூறிவிடுகின்றனர். நீங்கள் குழந்தைகள் நாடகத்தைப் பற்றி புரிந்து கொண்டீர்கள். உங்களுக்கு அனைத்தும் தெரியும் சொர்க்கத்தில் இருந்து யார், யார் வந்தார்கள். பின்னர் எவ்வாறு வருவார்கள். எதுவெல்லாம் நடைபெற்று வருகின்றதோ, அவை யாவுமே டிராமாவில் பதிவாகியுள்ளது. பாபாவிற்கு பிரசாதம் (போக்) படைப்பது கூட டிராமாவில் பதிவாகியுள்ளது. எதுவுமே புதுமையான விஷயம் அல்ல. நீங்கள் பார்வையாளராக இருந்து பார்க்கின்றீர்கள். ஒவ்வொருவரும் நடிகர்கள். அவரவர் பாத்திரத்தை குஷியாக நடித்துவிட்டு திரும்பி செல்கின்றனர்.

மனிதர்கள் இறந்து விட்டால் சொர்க்கவாசியாக ஆகிவிட்டார்கள் என்று எண்ணுகின்றார்கள். உங்களுக்கு தெரியும் சொர்க்க வாசியாக ஆவதற்காக நாம் முயற்சி செய்கிறோம். மனிதர்கள் காசியில் சென்று வசிக்கின்றார்கள். கங்கையின் கரையோரம் அமர்க்கின்றார்கள். சிவனுடைய கோவில் உள்ளது. சிவனுடைய நினைவில் சதா இருக்கின்றனர். கங்கையின் மகிமையை செய்கின்றார்கள். சிவனை மகிமை செய்கின்றார்கள். காசியில் உயிரை மாய்த்துக் கொள்வது போல் கங்கையில் செய்வதில்லை. சிவன் தான் பதீதபாவனன். சிவனின் கோவில் உள்ளது, காசியில் உள்ள கிணற்றில் சிவனின் பெயரைக் கூறி உயிரை மாய்த்துக் கொள்வார்கள். நீங்கள் பனாரஸில் உள்ளவர்களுக்கு நன்கு ஞானத்தைத் தர முடியும். நீங்கள் இங்கு அமர்ந்துள்ளீர்கள், கங்கை கரையோரத்தில் சிவன் கோவில் உள்ளது. பின்னர் ஏன் சிவன் மீது பலியாகின்றார்கள்? சிவன் பதீதபாவனனா? அல்லது கங்கையா? உண்மையில் பதீதபாவனன் சிவன். பகவானிடம் பலியாகின்றார்கள். பகவான், பகவான் மீது பலியாகுவாரா என்ன? இவ்வாறு முடியாது. நானும் பகவான், நீயும் பகவான் என்று கூறமுடியாது. பகவான் தூய்மை இல்லாதவராக ஆவாரா என்ன? கங்கையில் சென்று குளிப்பதற்கு சர்வவியாபி என்ற ஞானம் தவறு என்று கூற முடியும். சிவன் தான் பதீதபாவனன் என்று நிரூபித்துக்கூற வேண்டும். எவ்வாறு குழந்தைகள் புரிய வைக்க வேண்டும் என்று சொல்லித் தருகின்றேன். காசியில் புரிய வைப்பது மிகவும் எளிது மேலும் நல்லது. சிவனின் கோவில் உள்ளது என்றால் அவசியம் எப்போதாவது வந்திருக்க வேண்டும். எப்போதும் சிவனை பாபா என்று அழைக்கிறோம். அவருக்கு ஒருபோதும் உடல் கிடையாது. சிவனென்ற பெயர் நிறைய குழந்தைகளுக்கு உள்ளது. கிருஷ்ணன் என்ற பெயரும் இலட்சக்கணக்கானவர்களுக்கு உள்ளது. அந்த கிருஷ்ணர் சத்யுகத்தில் இருந்தார். கிருஷ்ண பக்தர்கள் கிருஷ்ணரின் மூர்த்தியினை எடுத்து பூஜை செய்கின்றார்கள். மனிதர்களைச் செய்வதில்லை. கிருஷ்ணர் சத்யுகத்தில் இருந்தார் என்பது நிரூபணமாகின்றது. இராதா கிருஷ்ணர் யாரென்று மனிதர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் எப்போது இராஜ்யம் செய்தார்கள்? இதனை பாபா புரிய வைக்கின்றார்.

நீங்கள் சுயதர்சன சக்கரதாரிகள். விஷ்ணுவை சுயதர்சன சக்கரதாரி என்று கூறுகின்றார்கள். அவர் என்ன செய்தார் என்று யாருக்கும் தெரியாது. பாபா ஜோதி சொரூபமாக உள்ளார். விஷ்ணுவிற்கு இத்தனை ஆயுதங்கள் எங்கிருந்து வந்தது என்று யாருக்கும் தெரியாது. இவை யாவுமே நாடகத்தில்

பதிவாகியுள்ளது என்று புரிந்து கொண்டோம். பக்திமார்க்கத்தில் யார் சித்திரங்களைச் செய்தார்களோ, அவர்களே செய்வார்கள். இது உருவானது உருவாக்கப்பட்ட விளையாட்டு. பாதி கல்பம் பக்தி, பாதி கல்பம் ஞானம். இந்த விஷயங்களை நீங்கள் அறிந்து கொண்டீர்கள். உங்களுக்கு தான் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இவர் தான் உண்மையிலும், உண்மையான நாயகன். அந்த நாயகன் பொய்யானவர். உண்மைக்கும் பொய்மைக்கும் வேறுபாடு உள்ளது. பொய்யான நாயகன், உண்மையான நாயகன், மனைவி, கணவர் மீது அன்பு செலுத்துவாள். இப்போது நீங்கள் தெரிந்து கொண்டீர்கள் நாயகிகளுக்கு எவ்வளவு அன்பான நாயகன் கிடைத்துள்ளார். அவரை நாயகன் என்றும் பாபா (தந்தை) என்றும் கூறுகின்றோம். பாபாவிற்கும் அன்பு இருக்கின்றது. பாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. நாயகனிட மிருந்து, நாயகிக்கு எந்த ஆஸ்தியும் கிடைப்பதில்லை. தன்னை நாயகி என்று புரிந்து கொள்ள வேண்டும். குழந்தை என்று புரிந்து கொள்ளும் போது ஆஸ்தியின் சுவை வருகின்றது. எப்பொழுதும் சிவனை பாபா என்று கூறுகின்றோம். சிவபாபாவை, சிவபதி என்று கூறுவதில்லை. இப்போது நீங்கள் சிவனின் பெயரை ஜெபிக்க வேண்டியதில்லை. பாபாவை நினைவு செய்ய வேண்டும். ஈஸ்வரனுக்கு குழந்தையாக எப்பொழுதாவது ஆகியுள்ளீர்களா? எதுவரை குழந்தையாக ஆகவில்லையோ, அதுவரை ஆஸ்தியைப் பெற முடியாது. தாய், தந்தை என்றால் நேரில் சந்திக்க வேண்டும். நம்பிக்கை ஏற்பட்ட பின்னரும் சந்திக்கவில்லை, இறந்து விட்டால் ஆஸ்தி கிடைக்காது. அம்மாதிரி நிறைய பேர் உள்ளார்கள். ஆஸ்தியைப் பெறுவ தில்லை. பிரஜையாகச் செல்வார்கள். இவர் தான் தாய், தந்தை என்ற நம்பிக்கை இருக்கின்றது என்றால் நேரில் சந்திக்க வேண்டும். பின்னர் சேவை செய்து தன்னைப் போல் ஆக்க வேண்டும். பிரஜைகளை உருவாக்க வேண்டும். வாரிசை உருவாக்க வேண்டும். வீட்டில் அமர்ந்து கொண்டே முடியாது, முயற்சி செய்ய வேண்டும். இந்த விஷயங்களில் குழந்தைகள் சிந்தனை செய்ய வேண்டும். கிருஷ்ண லீலை புகழ்பெற்றது. சத்யுகத்தில் லீலைகள் இருக்கும். இங்கு இருக்க முடியுமா என்ன? சொர்க்கத்தில் என்னென்ன இருக்கும்! மாளிகை எப்படியிருக்கும் இதனை குழந்தைகள் உணருகின்றார்கள். அங்குள்ள விஷயங்களைக் கேட்கவே வேண்டாம், கூறும்போது வாயில் நீர் வருகின்றது. பாபா சுகத்தினைத் தருகின்றார். பாபாவை துக்கத்திற்காக அழைப்பதில்லை. உலகத்தில் மிகவும் துக்கம் உள்ளது. சில குடும்பத்தில் மருமகள் மிகவும் பேசக் கூடியவராக வந்துவிட்டால் குடும்பத்தையே கலங்க வைக்கின்றார். அம்மாதிரியாக நிறைய வீட்டினை பாபா பார்த்துள்ளார். இப்பொழுது சமயம் மிகவும் குறைவாக உள்ளது.

பாபாவுடையவர்களாக மாறினால் தான் பாபா உதவி செய்வார். வாரிசை உருவாக்கவில்லை என்றால் எப்படி ஆஸ்தி தரக்கூடியவரின் உதவி கிடைக்கும்? பாபா கூறுகின்றார், பயப்படாதீர்கள். செல்வந்தர்கள் பயப்படுகின்றனர். இந்த பாபா வள்ளலாக உள்ளார். பக்தி மார்க்கத்தில் கூட என் பெயரால் ஏழைகளுக்கு தானம் செய்தீர்கள். அதனின் அனுசாரம் பிறப்பு கிடைக்கின்றது. இப்போது நேரடியாக கூறுகின்றார். என்னுடைய வராக ஆகிவிட்டால் இராஜ்ய பாக்கியம் கொடுப்பேன். சிவபாபாவிற்கு வீடு என்பது அவசியமில்லை. அனைத்தும் அழியப் போகின்றது என்று கூறுகின்றீர்களே, பின்பு ஏன் வீடுகளைக் கட்டுகின்றீர்கள் என்று தங்களிடம் கேட்கின்றார்கள். அதுவரை எங்கே வசிப்பது. இறுதி சமயத்தில் குழந்தைகள் வந்து தங்குவார்கள்.

நீங்கள் இறுதியில் நிறைய காட்சிகளைக் காண்பீர்கள். எந்தளவு சமயம் நெருக்கத்தில் வருமோ அந்தளவு நிறைய சாட்சாத்காரம் ஆகும். யார் உதவியாளர்களோ, பின்னால் நிறைய சுகத்தினைக் காண்பார்கள். துக்கமான நேரத்தில் சுகத்தினைக் காண்பார்கள். அது ஒரு வித்தியாசமான சுகம். பாகிஸ்தானில் ஆனந்தமாக இருந்தீர்கள், எவ்வாறு வைகுண்டத்தில் சுயம்வரம் ஆகும். லெட்சுமி, நாராயணர் எப்படி இராஜ்யம் செய்வார், அனைத்தையும் பாபா சாட்சாத்காரம் செய்வித்தார். நீங்களும் நிறைய காண்பீர்கள். சிவபாபா வின் வழிப்படி நடந்து முட்களை, மலராக ஆக்கி உதவி செய்து கொண்டே இருக்க வேண்டும். தைரியமுள்ள குழந்தைகளுக்கு இறைவனின் உதவி கிடைக்கும். இப்படிப்பட்ட நாயகனை மிகவும் நினைவு செய்ய வேண்டும். உலகத்தினருக்கு சிறிதும் தெரியாது. இத்தனை குழந்தை கள் இருக்கின்றார்கள் என்றால் அவசியம் தாய், தந்தை இருந்திருக்க வேண்டும். அவர் மூலம் அளவற்ற சுகம் கிடைக்கின்றது. இந்த புகழ் லௌகீக தாய், தந்தைக்கு அல்ல. நீங்கள் நடைமுறையில் காண்கின்றீர்கள் எத்தனை குழந்தைகள். இறைவன் தந்தை தான் படைப்பவர். படைக்கின்றார் என்றால் தத்து எடுக்கின்றார் - யார் மூலமாக? இது வாய் வழி வம்சாவளி, மிகவும் எளிமையான முறையில் புரிய வைக்கலாம். இப்போது ஈஸ்வரனுடைய மடியில் வந்திருக்கின்றீர்கள், பின்னர் தெய்வீக மடியில் செல்வீர்கள். பின்னர் அசுரர்கள். இந்த ஈஸ்வரிய மடியிலிருந்து, சாந்திதாமம், சுகதாமம் செல்கின்றோம். அசுரர்களின் மடியில் துக்கமான உலகத்தில் செல்கின்றோம். இந்த மந்திரத்தினை நினைவில் வைக்க வேண்டும். பந்தனம் உள்ள கோபிகைகள் அழைக்கின்றார்கள். அவர்களுக்காக ஏதாவது ஏற்பாடுகள் செய்ய வேண்டியதாக உள்ளது. பாபா சிறிய, சிறிய கிராமங் களுக்குச் செல்ல முடியாது. பெரிய கிராமங்களில் இருந்து வந்து சந்திக்கின்றார்கள், செல்ல வேண்டியதாக உள்ளது, எவ்வாறு பலியாவது என்று புரிய வைக்கின்றார். இராஜா ஜனகர் பலியாகின்றார், பின்னர் பற்றற்ற நிர்வாகியாக (டிரஸ்டி) இருந்து பராமரிக்குமாறு செய்யுமாறு கூறப்பட்டது. நீங்கள் உங்களின் குழந்தைகளை கவனித்துக் கொள்ள வேண்டும். தன்னை ஆத்மா என்று புரிந்து பற்றற்ற நிர்வாகியாக உணருங்கள். இராவணன் என்ற மாயை துக்கம் கொடுக்கக் கூடியவன். ஆதலால் இராவணனுக்கு கோவில் என்பது கிடையாது, மற்றபடி கொடும்பாவி செய்கிறார்கள். இராவணன் மிகவும் துக்கம் கொடுத்தார். எந்தளவு துக்கம் கொடுத்தாரோ அந்தளவு ஒவ்வொரு ஆண்டும் அதிகமாய் உருவம் செய்து எரிக்கின்றார்கள். சிவபாபா சுகம் கொடுத்தார், அவர் கோவிலை மிகவும் அழகாகக் கட்டியுள்ளார்கள். இராவணன் துக்கம் தருபவனுக்கு கோவில் என்பது கிடையாது. அவனை அழிக்கின்றார்கள், காண முடியாத அளவு அழித்துவிடுகின்றார் கள். சிவபாபாவை கோவிலில் காண்கின்றோம். எவ்வளவு பூஜைகள் நடைபெறு கின்றது. உண்மையில் என்றும் பூஜைக்குரியவர் சிவபாபாவைத் தவிர வேறு யாருமே இல்லை. நீங்கள் பூஜைக்குரியவராக இருந்து பூஜாரியாக மாறுகிறீர்கள். நல்லது.

இனிமையிலும், இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) பாபாவின் நினைவில் இருக்க வேண்டும் மற்றும் அனைவருக்கும்

நினைவூட்ட வேண்டும். இதனை தானம் செய்து கொண்டே இருங்கள். பாபா மீது பலியாகிவிட்டு, நிர்வாகியாக இருந்து பராமரிப்பு செய்ய வேண்டும்.

(2) ஒவ்வொருவரின் பாகத்தையும் சாட்சியாக இருந்து பார்க்க வேண்டும். நாம் நமது பாகத்தை முடித்து விட்டு மகிழ்ச்சியாக திரும்பிச் சென்று கொண்டிருக்கிறோம் என்று இந்த நினைவில்எப்போதும் இருக்க வேண்டும்.

வரதானம் : சதா பாபாவிற்கு சமமானவர் ஆகி தன்னுடைய முழுமையான சொரூபத்தின் மூலம் அனைவருக்கும் மரியாதை தரக்கூடிய ஆசீர்வாதமளிக்கும் மூர்த்தி ஆகுக.

பாரத தேசத்தில் விசேஷமாக தேவிகளை (தேவதைகள்) ஆசீர்வாதமளிக்கும் சொரூபத்தில் நினைவு செய்கிறார்கள். ஆனால் யார் பாபாவிற்கு சமமாகவும் நெருக்கத்தில் இருக்கிறார் களோ, அவர்கள் தான் ஆசீர்வாதமளிக்கும் மூர்த்திகளாக ஆகிறார்கள். ஒருவேளை சிலநேரங் களில் பாபாவிற்கு சமமாகவும், சில நேரங்களில் பாபாவிற்கு சமமாக இல்லாமல் இருப்ப தினால், தான் முயற்சி செய்யக்கூடியவர்களாக இருக்கிறீர்கள் என்றால் ஆசீர்வாதமளிக்கும் மூர்த்தி ஆக முடியாது, ஏனெனில் பாபா முயற்சி செய்வதில்லை, அவர் எப்பொழுதும் முழுமை யான சொரூபத்தில் இருக்கிறார். எனவே எப்பொழுது சமமானவராக இருக்கிறீர்களோ, அதாவது முழுமையான சொரூபத்தில் இருக்கும் பொழுது தான் ஆசீர்வாதமளிக்கும் மூர்த்தி என்று சொல்ல முடியும்.

சுலோகன்: நினைவில் மிக வேகமாக ஓடினீர்கள் என்றால், பாபாவின் கழுத்து மாலையாக, வெற்றி மணியாக ஆகிவிடலாம்.